முதன்மை சார்பு நீதிமன்றம். விழுப்புரம்

**அசல் வழக்கு எண்**.1336/2024

Witness-PW1

பெயர் – ராஜேஸ்வரி

**க**/பெ – வீரப்பன்

இன்று (13.2.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

சத்தியமாகச் சொல்கிறேன்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.ஆ2 தானசெட்டில்மென்ட் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் இந்த வழக்கில் கண்ட பி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 3 சொத்துகள் தான் அதில சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தான செட்டில்மென்ட்டில் ஆண் வாரிசுகள் இரு ந்தால் ஆண் வாரிசு ஆண் வாரிசுகள் இல்லாத பட்சத்தில் பெண் வாரிசுகள் அடையவேண்டியது என்று நிபந்தை சரத்து கண்டுள்ளது என்றால்ச ரிதான். தானசெட்டில்மென்ட் எழுதி வைத்த சந்திரம்மாளுக்கு ஆண் வாரிசு எதுவும் இல்லை வாதி மட்டுமே பெண் வாரிசு என்றால் சரிதான். இந்த பத்திரத்தில் கண்ட 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களின் மீதி விஸ்தீரணம் மற்றும் வீடு ஆகிவைகள் தான் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த பூர்வீக சொத்தில் 5ல் 1 பாகம் ஒதுக்க வேண்டுமென்று வாதி இந்த வழக்கில் கேட்டு அந்த சொத்துக்களை சி அட்டவணை சொத்துக்களாக காட்டியுள்ளார்கள் என்றால் சரிதான் ஆனால் அதில் அவர்களுக்கு பாக உரிமை இல்லை. பி மற்றும் சி அட்டவணைச் சொத்துகளுக்கான பட்டா அமிர்தம்மாள் காலத்திலேயே 1ம் பிரதிவாதிக்கு பட்டா மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ2 ஏன் செல்லாது என்று நான் சொல்கிறேன் என்றால் அதில் காட்டப்பட்டுள்ள சக்குபந்திகள் சரியானவை அல்ல. சக்குபந்தி சரியில்லை என்று நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாணப் பத்திரிக்கை ஆகியவைகளில் சொல்லியுள்ளேனா என்று இல்லை. வா.சா.ஆ2 ஆவணத்தில் அந்த ஆவணம் ஏற்பட்ட காலத்திலேயே தானசெட்டில்மென்ட் சொத்துக்கள் சந்திராம்மாள் என்பவரிடம் ஒப்படைத்தாக வாசகங்கள் கண்டுள்ளது என்றால் இல்லை.

தானசெட்டில்மென்ட் சொத்துக்களை சந்திரா அம்மாள் அனுபவித்து வந்தாரா என்று எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். சந்திரா அம்மாளுக்கு பிறகு தான் எனது கணவர் என்னை திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். எனது கணவர் வீரப்பன் அவர் உயிரோடு இருக்கும் வரை வா.சா.ஆ2 தானசெட்டிலமென்ட் பத்திரம் செல்லாது என்று வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சந்திரா அம்மாளுக்கு வா.சா.ஆ2 தானசெட்டிலமென்ட்ல் கண்ட சொத்துக்கள் கொடுக்கப்பட்டு அவர் அனுபவித்து வந்தார் அவரது இறப்பிற்கு பிறகு அது வாதிக்கு பாத்தியப்பட்டது அதனை தெரிந்தும் நான் பொய்யான காரணங்கள் சொல்லி எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. தானசெட்டில்மென்டில் உள்ள சொத்துக்களை எனது கணவர் விவசாயம் செய்து செலவினங்களை எடுத்துக்கொண்டு மீதி வருவாய்களை வாதி வசம் கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சி அட்டவணைச் சொத்துக்கள் 2 ஏக்கர் ஒன்றரை சென்ட் நிலம் மற்றும் வீடு ஆகியவைகள் பொதுகுடும்பச் சொத்துக்கள் அதில் வாதிக்கு 5ல் 1 பாகம் பாத்தியமானது என்றால் சரியல்ல. தாவா சி அட்டவணைச் சொத்துக்கள் 2 ஏக்கர் ஒன்றரை சென்ட் நிலம் மற்றும் வீடு ஆகியவைகள் ராமச்சந்திரன் பெயரில் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். ராமச்சந்திரன் காலத்திலிருந்தும் அதன் பிறகு அமிர்தம்மாள் காலத்திலிருந்தும் அதனை தொடர்ந்து எனது கணவர் வீரப்பன் காலத்திலும் தொடர்ந்து தாவா சி அட்டவணைச் சொத்துக்கள் 2 ஏக்கர் ஒன்றரை சென்ட் நிலம் மற்றும் வீடு அனைத்தும் பொதுக் குடும்ப சொத்தாகத்தான் பாவித்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சி அட்டவணைச் சொத்துக்கள் 2 ஏக்கர் ஒன்றரை சென்ட் நிலம் மற்றும் வீடு பொருத்து பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்றால சரிதான். ஆண்டாள் அம்மாளுக்கு திருமணம் நடந்ததுஎ னக்கு தெரியாது என்றால் சரிதான். ஆண்டாள் அம்மாள் அப்போதிலிருந்த இப்போது வரை சி அட்டவணை சொத்தில் பாகம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். ஆண்டாள் அம்மாள் வாதி தரப்பில் ஒரு சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். ஆண்டாள் அம்மாளும் எனது கணவர் வீரப்பனும் சி அட்டவணை சொத்து பாகப்பிரிவினை எதுவும் செய்துகொள்ளவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.த.சா.ஆ1 முதல் 10 வரையிலான ஆவணங்களான திருமண பத்திரிக்கை போன்ற ஆவணங்கள் பற்றி எனது கணவர் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோதும் அவருக்கு பிறகு நாங்கள் எதிர்வழக்குரை

தாக்கல் செய்த போதும் அந்த ஆவணங்கள் பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். பி.த.சா.ஆ9 கிரையப் பத்திரம் எனது கணவர் வீரப்பன் கல்யாணத்திற்காக நிலத்தை விற்பனை செய்ததாகத்தான் வாசகம் கண்டுள்ளது என்றால் இல்லை சந்திரா அம்மாள் கல்யாணத்திற்காகத் தான் அது விற்கப்பட்டது. பி.சா.ஆ9ல் சர்வே எண். 125/10ல் 1 ஏக்கர் 73 சென்ட் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி மற்றும் சி அட்டவணைச் சொத்தில் பழைய சர்வே எண்.125/10 அதன் புதிய எண் தான் 148/8பி 1 ஏக்கர் 73 சென்ட் ஆவணங்களில குறிப்பிடப்பட்டுள்ளது அதனை நாங்கள் தவறாக எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லாத பி.த.சா.ஆ1 முதல் 10 வரையிலான ஆவணங்கள் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி மற்றும் சி அட்டவணைச் சொத்தை எனது கணவர் 1ம் பிரதிவாதி எங்கள் மகனாக 2 ,3 பிரதிவாதிகள் பேரில் தானசெட்டில்மெனட் பி.சா.ஆ11 எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். பி.சா.ஆ11 தானசெட்டில்மெனட்எழுதியது ஆண்டாள் அம்மாளுக்கு தெரியாது என்றால் சரியல்ல அவரிடம் கேட்டுவிட்டு தான் எழுதினார். பி.சா.ஆ1 ஆவணத்தில் வீரப்பன் மட்டும் தான் கையெழுத்திட்டுள்ளார் ஆண்டாள் அம்மாள் கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சியத்தில் எனது கணவர் வீரப்பனும் ஆண்டாள் அம்மாளும சேர்ந்து பி.சா.ஆ11 தானசெட்டில் எழுதி'க்கொடுத்தாகத் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.சாஆ11 ல் எனது கணவர் அவருக்கு மட்டும் பாத்தியமான பூர்வீக சொத்து என்று காட்டி எழுதியுள்ளார் என்றால் சரிதான். வாதி பி அட்டவணை சொத்தையும் சி அட்டவணையில் அவருக்குரிய பாகத்தையும த னியாக பிரித்துக்கொடுக்குமாறு எனது கண வரிடம் கேட்டதால் எனது கணவ்ர் பிசாஆ11யை எழுதியுள்ளார் என்றால் சரியல்ல. பி.சா.ஆ11 சொத்துக்களை எனது கணவர் வீரப்பனுக்கு மட்டும் பாத்தியமானதல்ல வாதி மற்றும் அங்கம்மாளுக்கும் பாத்தியம் உள்ளது அதனை மறைத்து தானம் கொடுத்துள்ளதால் அந்த தானசெட்டில்மென்ட் செல்லாது என்றால்ச ரியல்ல. பி.சா.ஆ12, 13 வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்டதால் அது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ10 மற்றும் 11 பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கறிஞர் அறிவிப்பி'ல் ஒரு எதிர்வாதமும், எதிர்வழக்குரையில் ஒரு எதிர்வாதமும் எனது முதன்மை சாட்சியத்தில் ஒரு எதிர்வாதமும் வாதியின் பாக உரிமையையும் வாதியின் சொத்தையும் ஏமாற்றுவதற்காக முன்னுக்குப் பின் முரணான எதிர்வாதம்

செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பி அட்டவணைச் சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீன ஒப்படைப்பு பரிகாரமும்சி அட்டவணை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால்சரியல்ல. வாதியின் பாக உரிமையை முறியடிக்க பி.சா–ஆ1 முதல் 10 ஆவணங்களை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால்ச ரியல்ல. அந்த ஆவணங்களில் கண்டுள்ளபடி வாதிக்கு சீர்வரிசையோ வேறு செலவினங்களோ கடனோ எதுவும் இல்லை என்றால் சரியல்ல தாவாப்படி தீர்ப்பாக வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram